NALLUR BRANCH LIB…
MUNICIPAL COUNCIL

* தரமான வர்ணப் புகைப்படப் பிரதிகள்
* கம்பியூட்டர் முறையில்
* குறைந்த செலவில் பெற்றுக்கொள்ள
ஆர்த்தி ஜுவலர்ஸ் (பிறைவேட் லிமிட்டெட்)
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23628



# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

யாழ்ப்பாணம் அக்ஷய ஆடி வைகாசி மீ 28 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ஷவ்வா பிறை 02 (11-06 1986) UTHAYAN- A DIVERY TAMIL DAILY கதிர்: 175

எழில்மிகு இயற்கைக் காட்சிகளை வர்ணப் புகைப்படத்தில் தந்திடும் தரமான
Sakura - Fuji - Kodak - Tudor
வர்ணப் புகைப்படச் சுருள்களைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
ஆர்த்தி ஜுவலர்ஸ் (பிறைவேட் லிமிட்டெட்)
தொலைபேசி: 23628



குருநகர் சனசமூக நிலையத்தில் கோரக் கொலையுண்டவர்களின் சடலங்கள் அடுக்கப்பட்டிருக்கும் காட்சி.

இதயத்தை நெகிழ்த்து, உருக்கி, கண்ணீரை வடியவைக்கும் சோகக் காட்சி.

மிகுதியைப் படங்கள் பேசும்.

# மண்டைதீவுக் கடலில் வைத்து 34 தமிழர்

# குத்தியும், வெட்டியும், சுட்டும் கோரக்கொலை

## கறுப்பு சீருடையில் வந்த பாதகர் நடத்திய இரத்த வெறியாட்டம்

— அலுவலகச் செய்தியாளர்:- கே. ஆர். —

யாழ்ப்பாணம், ஜூன் 11

மண்டைதீவுக் கடலில் வைத்து 34 தமிழர்கள் குத்தியும் வெட்டியும் சுட்டும் கோரமாகக் கொலை செய்யப்பட்டனர்.

கறுப்புச் சீருடையில் வந்த பாதகர்கள் இந்த இரத்த வெறியாட்டத்தை நடத்தினர்.

அவர்கள் படகில் சென்றவர்களை நீரில் நிற்கவிட்டு, கண்களைத் தோண்டியும், வயிற்றைக் கிழித்தும் மற்றும் பலவிதமான சித்திரவதைகளைச் செய்தும் தமது கொலை வெறியைத் தீர்த்தனர்.

கொலையுண்டவர்களின் சடலங்களை முழுமையாகப் பார்க்கப் பொறுக்காதவர்களாக, அவற்றின்மீது குண்டுகளையும் வீசினர் என்று சொல்லப்படுகிறது.

இந்தக் காட்டுமிராண்டித்தனம் நேற்றுக்காலை நட்த்தப்பட்டது.

குருநகர்பாசையூர்பகுதிகளில் இருந்து கரைவலைத் தொழிலுக்கு சென்றமீனவர்களே கறுப்புச்சட்டை அணிந்தவர்களினால்கோரமாகச் கொலை செய்யப்பட்டவர்கள் ஆவர்.

நேற்றுக்காலை 8 30 மணியளவில் மண்டைதீவுக்கும் அல்லைப்பிட்டிக்கும் இடையில் உள்ள கடற்பகுதியிலேயே இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கொல்லப்பட்டவர்களில் சிறுவர் முதல் முதியோர் வரை அடங்கியிருந்தனர்.

அவர்கள் சென்று கொண்டிருந்த மீன்பிடிப் படகு குருநகரைச் சேர்ந்த சிமியோன்பிலிப் என்பவருக்கு சொந்தமான ''தூய ஒளி'' என்ற படகாகும்.

இச்சம்பவம் பற்றி அறியவருவதாவது.

நேற்று அதிகாலை ஐந்து மணியளவில் குருநகரில் இருந்து சென்ற 36 மீனவர்களும் மண்டைதீவுக்கும் அல்லைப்பிட்டிக்கும் இடையே உள்ள கடல் பகுதிகளில் தமது தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

3 படகுகள் வந்தன.

காலை சுமார் 8-30 மணியளவில் மண்டைதீவு கடற் பகுதியில் நின்ற பெரியபீரங்கிப் படகிற்கு அருகில் நின்ற மூன்று பிளாஸ்டிக் படகுகள் கரைவலை இழுத்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி வந்தது.

இந்த பிளாஸ்டிக் படகுகளில் இருபதுக்கும் மேற்பட்ட கறுப்புச் சட்டைக்காரர்கள் இருந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வெட்டாதீர்கள்! சுடாதீர்கள்!! என்று கத்தியும் அவர்கள் கேட்கவில்லை

### தப்பி வந்தவர் தெரிவித்த தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 11

வெட்டாதீர்கள் சுடாதீர்கள் என மீனவர்கள் கத்திக் குளறியும் கறுப்புச் சட்டைக் காரர்கள் கேட்கவில்லை. வெட்டியும், சுட்டும் அவர்களை துடிதுடிக்கக் கொன்றனர்.

மயிரிழையில் தப்பிய சிமியோன் மரியதாஸ் (41 வயது) இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து சொன்னதாவது:-

நேற்றுக்காலை 8-30 மணியளவில் மண்டைதீவுக்கும் அல்லைப்பிட்டிக்கும் இடையில் உள்ள அந்தோனியார் கோவிலுக்கு அருகில் கரைவலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று பூரண கடை அடைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 11

மண்டைதீவுக் கடற் கரையில் இடம்பெற்ற படுகொலைகளுக்கு கண்டனம் தெரிவித்தும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு அனுதாபம் தெரிவித்தும் இன்று (புதன் கிழமை) பூரண கடையடைப்பு நடத்தப்படுகிறது.

யாழ் வர்த்தகர் சங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குருநகர் சோகநகரானது

### இறந்தோரின்உறவினர் மயங்கிவிழுந்தபரிதாபம்

யாழ்ப்பாணம்,ஜூன் 11

மண்டைதீவுப் பயங்கரப் படுகொலைச் சம்பவத்தை அறிந்து முழு யாழ்ப்பாண நகரமுமே சோகத்தில் துவண்டது.

இப்படுகொலையில் உயிரிழந்தவர்கள் அனைவரும் குருநகர் வாசிகள். ஒன்று, இரண்டா. அடுக்கடுக்காக 30 பேரின் சடலங்கள் நேற்று பிற்பகல் குருநகருக்குக் கொண்டு வரப்பட்டன,

இறந்தவர்களின் சகோதரர்கள். மனைவிமார், குழந்தைகள் சடலங்களைக் கண்டவுடன் அழுது, குழறி, தலையைப் பிய்த்துக்கொண்டு மயங்கி விழுந்த காட்சி உள்ளத்தை உலுப்புவதாக அமைந்தது.

குருநகர்ப் பகுதிக்குத் திரண்டு சென்ற பொது மக்களும் சோகத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ...ரச அதிபர் சடலங்களை பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், ஜூன் 11

மண்டைதீவுக் கடலில் கோரமாக கொலை செய்யப்பட்ட சிறுவர்கள் இளைஞர்கள், முதியவர்கள் ஆகியோரது சடலங்களை நேற்று யாழ் அரச அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் பார்வையிட்டார்.

அவருடன் பொது சனத்தொடர்பு அதிகாரி திரு. குலசேகரம். மேலதிக அரசாங்க அதிபர்

(4ஆம் பக்கம் பார்க்க )

## கொலையுண்டவர்களில் 30 பேரின் விவரம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

மண்டைதீவுக் கடலில் கொலையுண்டவர்களில் 30 பேரின் விவரம் வருமாறு:-

1. இ. இஸ்தாக்கி (54 வயது)
2. பேதுறு செயதேயு சேவியர் (62 வயது)
3. மனுவல் மரியநாயகம் (35 வயது)
4. எமலியூஸ் மக்மஸ் ஈஸ்வரன் (18 வயது)
5. பற்றிக் டோனுஸ் (60 வயது)
6. டோனுஸ்மவுண்ட் (38 வயது)
7. டோனுஸ் டியூக் (18 வயது)
8. பெனடிற் அலிஸ்ரன் (28 வயது)
9. சுப்பிரமணியம் கோபாலகிருஷ்ணன் (20 வயது)

(4ஆம் பக்கம் பார்க்க )

### சுபநேரம்

11 — 6 — 1986

புதன்கிழமை

சுபநேரம்;
4·22 முதல் 5·52 வரை

ராகுகாலம்:
11·52 முதல் 1.22 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

சதுர்த்தி விரதம்



மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்டோரின் மேலும் சில சடலங்கள்.

## குடிமனைப் பகுதிகளை நோக்கி வந்த சிப்பாய்கள் படகிலிருந்து வேட்டுக்கள் ஹெலிக்கொப்டர் சூடு

—மண்டைதீவு —வேலணை செய்தியாளர்கள்—

வேலணை, ஜூன் 11

நேற்று அதிகாலை மண்டைதீவு சந்தியடியில் உள்ள மினி முகாமில் இருந்து கால் நடையாகவும் ஹெலிக்கொப்டர் மூலமாகவும் பாதுகாப்புப்படையினர் மண்டைதீவு குடிமனைப்பகுதிகளை நோக்கி சென்றனர். அப்போது ஹெலிக்கொப்டர்

(4 ஆம் பக்கம் பார்க்க)



உந்தக் கொலைகாரப் பாதகன்களுக்கு மேலை வானம் இடிஞ்சு விழாதே!... உதுகின்ரை ஊழ்வினையை உவங்கள் அனுபவியாமலே போவாங்கள்!....

## பூதவுடல்கள் இன்று நல்லடக்கம்

யாழ்ப்பாணம் ஜூன் 11

மண்டைதீவு படுகொலையில் இறந்தோரது பூத உடல்கள் அனைத்தும் இன்று காலை 11 மணியளவில் பாசையூர் புனித யாகப்பர் ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

பிற்பகல் ஒரு மணி

(4ஆம் பக்கம் பார்க்க )

## வல்வெட்டித்துறையில் கடல், தரை, விமானத் தாக்குதல்

### அறுவர் பலி, பலர் காயம், வீடுகள் சேதம்

பலாலி, ஜூன் 11

கடல் பீரங்கியாலும் ஹெலிக்கொப்டர் தாக்குதலாலும் இராணுவ முகாம்களில் இருந்து ஏவப்பட்ட ஷெல்களாலும் நேற்றும் ஆறு பேர் வரை இறந்தனர். பலர் காயமடைந்தனர். பல வீடுகள் மிக மோசமாகச் சேதமடைந்தன ஊரிக்காட்டில் மட்டும் 20 வீடுகள் சேதம் அடைந்தன.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

வல்வெட்டித்துறைக் கடற்பகுதியில் நிலை கொண்டிருந்த கடற்படையின் சிறு பீரங்கி வள்ளங்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்கிய தால் படகுகள் சேதப்படுத்தப்பட்டன.

சில கடற்படையினரும் இறந்து அல்லது படுகாயமடைந்தனர்.

இதைத் தொடர்ந்து

( 4ஆம் பக்கம் பார்க்க )

## இலங்கை பிரிக்கப்படுவதற்கு பதில் எந்தளவு சுயாட்சி?

### ஜே. ஆரிடம் ராஜீவ் கேள்வி

கொழும்பு, ஜூன் 11

இலங்கையைப் பிரிப்பதற்குப் பதிலாக தமிழ்மக்களுக்கு எந்த அளவு அரசியல் சுயாட்சி வழங்கத் தயாராக இருக்கின்றீர்கள்?

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனவை, பிரதமர் ராஜீவ்காந்தி கேட்டுள்ளார்.

பிரதமர் காந்தி, திரு. ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிய பதில் கடிதத்திலேமேற்கண்ட கேள்வியை எழுப்பியிருப்பதாக கொழும்பு அரசு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

பிரதமர் காந்தியின் பதில் கடிதம் இன்று

(4ம் பக்கம் பார்க்க)

எவர்விஷன்
( இடமாற்றம் )
பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு கொட்டடிச் சந்தியிலிருந்து எமது ஸ்தாபனம் இன்று நெ. ட்கம் 21A மணிக்கூட்டு வீதிக்கு (ஆஸ்பத்திரிக்குப் பின்பக்கம்) இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
EVERVISION
21 A, CLOCK TOWER ROAD,
JAFFNA.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூஸா கைதிகளை பார்வையிட

# புதிய கட்டுப்பாடுகள்

## சுற்று நிருபமாக கையளிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 11

பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தீவிரவாத சந்தேக நபர்களைப் பார்வையிடச் செல்லும் பெற்றோர்களுக்கு கைதிகள் பராமரிப்பு தொடர்பாக ஆயுதப்படையினரால் விளக்கமளிக்கும் சுற்று நிருபம் ஒன்று வழங்கப்படுகிறது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் அந் நபர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்படுகிறது.

கைதி பராமரிப்பு தொடர்பான தகவல்கள் வருமாறு;

சந்தேக நபரை பெற்றோரைத் தவிர மனைவி, மற்றும் எவராவது பார்ப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

சந்தேக நபரை விரும்பிய இடத்தில் தடுத்து வைக்கவும் அழைத்துச் செல்லவும் ஆயுதப்படையினருக்கு உரிமையுண்டு.

செய்திப் பத்திரிகைகள் வழங்க முடியாது. வாசிப்புச் சாதனங்களை பொலீஸ் மா அதிபரின் அனுமதியுடன் வழங்கலாம்.

அரச செலவில் நிறையுணவு வழங்கப்படுகின்றது. உடைகளை வழங்கல், கடிதத் தொடர்பு ஆகியவற்றுக்கு பொலீஸ் மா அதிபரின் அனுமதி பெறவேண்டும்.

தினசரி 10 சிகரெட்டுகள் வழங்கப்படுகின்றன. எழுதும் தாள், பேனா, பற்பசை, சோப் போன்றனவும் வழங்கப்படுகின்றன

ஒழுங்காக குளித்தல் அப்பியாசம் செய்தல் வைத்தியம் போன்ற வசதிகளும் வழங்கப்படுகின்றன

இப்படி சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலணை—அராலித்துறைப் பாலம்

## இணைப்பு முயற்சியில் புங்குடுதீவு தனியார் போக்குவரத்து சேவைச்சங்கம்

யாழ்ப்பாணம் ஜூன் 11

வேலணை -- அராலித்துறைப் பாலம் இணைப்பு முயற்சியில் புங்குடுதீவு தனியார் போக்குவரத்துச் சேவைச் சங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

இதனிடையில் கடந்த 30 ஆண்டுகளாக அழிந்து கிடந்த அராலித்துறை புங்குடுதீவு தனியார் போக்கு வரத்துச் சேவைச் சங்கம் எடுத்துக் கொண்ட முயற்சியினால் சுமார் 7,500 ரூபா செலவில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இப்பாலம் திருத்தப்படாமல் இருந்திருந்தால் பொது மக்கள் சுமார் 400 யார் தூரத்துக்கு பொருள்களைத் தலையில் வைத்து சுமந்து கொண்டு கடலுக்குள் நடந்து செல்ல வேண்டி ஏற்பட்டு இருக்கும்.

இப்போது அந்த நிலை பாலம் திருத்தி அமைக்கப்பட்டதால் தவிர்க்கப்பட்டிருக்கின்றது (இ-எ)

## ரூபா 3 லட்சம் செலவில் ஆலயம் புனரமைப்பு

வட்டுக்கோட்டை, ஜூன் 11

சித்தன்கேணி கலைநகர் கம்பம்புலோவ ஆதி வைரவர் கோவில் மூலஸ்தான புனரமைப்பு வேலைகள் சுமார் மூன்று லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் சிவநெறிக் காவலர் திரு. வீர. சுப்பிரமணியம், செயலாளர் திரு வே. த. கதிர்காமநாதன், பொருளாளர் திரு. பொன். தெண்டாயுதபாணி ஆகியோர் இப் புனரமைப்பு வேலைகளைச் சிறந்த முறையில் நிறைவேற்றி வைப்பதற்கு துரித முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதி பொதுமக்கள் இக்கோயில் புனரமைப்பு வேலைகளுக்கான நிதி உதவியைச் செய்து வருகின்றனர்.

### ஆங்கில தின போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 11

தமிழ் மாணவர்களின் ஆங்கில ஆர்வத்தை அதிகரிக்கும்முகமாக ஆங்கிலதினப் போட்டிகள், ஆங்கிலபாடநெறி சம்பந்தமான பொருட்காட்சி என்பன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

ஆங்கில தினப் போட்டிகள் கல்வி வட்டார ரீதியாக இரண்டாம் தவணையிலும், மாவட்ட ரீதியாக மூன்றும் தவணையிலும் நடத்தப்படவிருக்கின்றன (2-5)

## நாட்டார் குழந்தைக் கவிதைகள் கணிசமான அளவு வேண்டும்

### கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 11

குழந்தைக் கவிதைத் தொகுதிகளில் குறைந்தது முப்பதுசத விதமாவது நாட்டார் குழந்தைக் கவிதைகளாக இருக்கவேண்டும்;

நல்லூர் கல்விவள நிலையத்தினால் நடாத்தப்பட்ட குழந்தைக்கவிதை கருத்தரங்கில் சிறப்புரையாற்றிய கலாநிதி இ. பாலசுந்தரம் இவ்வாறு கூறினார்.

நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க. சிவவிநாயகமூர்த்தி நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

கலாநிதி பாலசுந்தரம் தொடர்ந்து கூறியதாவது:-

கவிஞர்கள் எவ்வளவு தான் எளிமையாகக் குழந்தை மனோநிலையில் நின்று கவிதைகளைப் படைத்தாலும், அவற்றில் ஓரளவாவது செயற்கைத் தன்மை தவிர்க்க முடியாமல் ஏற்பட்டுவிடுகிறது.

ஆனால் நாட்டார் இலக்கியமாகக் கிடைக்கும் குழந்தைக் கவிதைகளோ இயல்பாகவே இருக்கின்றன

இவற்றில் உணர்ச்சி, சொல், சந்தம் ஆகியவை குழந்தைக்கு ஏற்ற வகையில் அமைகின்றன.

ஊர்தோறும் பெற்றோரும் பேரன், பேத்தி, பூட்டன், பூட்டி ஆகியோரும் பிள்ளைகளுக்குக் குழந்தைப் பாடல்களைச் சொல்லிக் கொடுத்து வருகிறார்கள்.

பல விளையாட்டுகளிலும் குழந்தைப் பாடல்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இவற்றை ஆசிரியர்கள் நேரடியாகவோ குழந்தைகள் மூலமாகவோ தொகுத்துப் பாதுகாப்பது அவசியம்".

—இவ்வாறு கலாநிதி பாலசுந்தரம் கூறினார்.

அடுத்துப் பேசிய திரு. க சொக்கலிங்கம் 'குழந்தைக் கவிதைக்குரிய பொருள் அவர்களுடைய அன்றாட வாழ்க்கை அனுபவத்துடன் தொடர்புடையதாக இருப்பது அவசியம்' என்றார்.

நல்லூர் கல்விவள நிலையப் பொறுப்பாளர் திரு. பீ. நடராசா நன்றியுரை கூறினார். (உ-9)

## வாஷிங்டனில் திருமணம் திரைவடிவம் பெறுகின்றது

—பிரபல நாவலாசிரியர் சாவி எழுதிய வாஷிங்டனில் திருமணம் படமாகப் போகிறது.

முதலில் டி.வி.யில் 13 வாரங்கள் வருவது போலத் தயாராகுமாம்.

இதைப்பற்றி எழுத்தாளர் சாவியிடம் கேட்ட பொழுது அவர் சொன்னதாவது

நான் 20 வருடங்களுக்கு முன்னால் எழுதிய நாடகம் இன்றும் கூட மக்கள் விரும்பினால் படிக்கும் நாடகமாக உள்ளது.

வாஷிங்டனில் திருமணத்தை ஆனந்த விகடனில் தொடராக எழுதினேன். அப்பொழுது எனக்கு எனது பெயரைப் போடவே பயம். உதாசீனப்படுத்திவிடுவார்களோ எனப் பயந்தேன். ஆனால் அப்பொழுதே மக்கள் மத்தியில் மிக்க பிரபல்யம் அடைந்தது எனக்கு மிகுந்த மனமகிழ்ச்சியை தந்தது.

இதைப் படமாக்க வேண்டும் என்று பலர் வந்து என்னிடம் கேட்டார்கள் ஆனால் நான் அனுமதி தரவில்லை. காரணம்—அமெரிக்காவில் நடப்பதுபோல நான் குறிப்பிட்டுள்ள இடங்களுக்கு சென்றுதான் படமெடுக்க வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் அந்த அளவிற்கு என்னை வந்து கேட்ட தயாரிப்பாளர்களுக்கு வசதியில்லை என எனக்குத் தெரியும்.

ஆனால்இப்பொழுது டெலிபிலிமாக உருவாக்க ஒப்புக் கொண்டுள்ளேன். அதையே திரைப்படமாகவும் மாற்றப் போகின்றேன்.

இந்தப் படத்தை ஏக்நாத் இயக்க விருக்கின்றார் எனத் தெரிவித்தார் சாவி.

வாசகர்களுக்கு நகைச்சுவை வழங்குவதே எனது ஒரே ஒரு குறிக்கோள். அதனால் வாஷிங்டனில் திருமணத்தின் ஒரிஜினல் வடிவம் குறையாமல் மேலும் பல புதிய நகைச்சுவைத் தகவல்களையும் சேர்த்துள்ளேன் என தெரிவித்தார்.

தினசரி சினிமா

## பொலீஸ் படைக்கு 5,000 பேர்

கொழும்பு, ஜூன் 11

இலங்கைப் பொலீஸ் படைக்கு மேலும் 5,000 பேர் சேர்க்கப்பட உள்ளனர்.

இதற்கான அறிவிப்பு அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

18-30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் அனுப்பும் கடைசித்திகதி செப்டம்பர் 30 என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## மீளாய்வு செய்ய கோரிக்கை

நீர்வேலி, ஜூன்.11

வலி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள நீர்வேலிக் கிராமத்திலுள்ளவர்களில் வறுமை நிவாரணம் கிடைக்கவேண்டிய பலரின் விண்ணப்பங்களுக்கு சிபார்சு செய்யப்படவில்லை என்று கூறப்படுகிறது

தமது விண்ணப்பங்களை மீளாய்வு செய்யும்படி இவர்கள் உதவி அரசாங்க அதிபரை கோரி உள்ளனர்.

புதிய அலுவலகத்தில்

## தபால் விநியோகம் மட்டுமே நடக்கிறது

யாழ்ப்பாணம், ஜூன் 11

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவில் திறக்கப்பட்ட தபால் நிலையத்தில் தற்பொழுது தபால், தந்தி, கடுகதித் தந்தி விநியோகங்கள் மட்டுமே நடைபெறுகின்றன.

தபாற்கந்தோரில் போதிய பாதுகாப்பு இல்லாததன் காரணமாக முத்திரைகள், மணிஓடர்கள் விற்பனை செய்ய முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதனால் ஏராளமான பொதுமக்கள் தபால் நிலையம் சென்று ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திய தனியார் வியாபாரிகள் அதிக இலாபம் வைத்து முத்திரைகள், வான் கடிதங்களை விற்பனை செய்து வருகின்றனர். (உ-எ)

## பிரசவ கூடம்

பண்டத்தரிப்பு, ஜூன் 11

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலைக்கு 3 லட்சம் ரூபா செலவில் நவீன பிரசவ கூடம் ஒன்று இவ்வாண்டு அமைக்கப்படும்.

இத்தகவலை யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் என் கனகசபை தெரிவித்தார். (இ-120)

## உடுவில் கல்வி வலயம் மணவர்களுக்கு வாசிப்பு நூல்

### கல்வி வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு

மானிப்பாய், ஜூன் 11

மானிப்பய் வட்டாரத்திலுள்ள உடுவில் கல்வி வலய பாடசாலைகளின் மாணவர்களுக்கென வாசிப்பு நூல்களை திரட்டிக் கொடுப்பதற்கு உடுவில் வலய கல்வி வளர்ச்சிக் கழகம் தீர்மானித்துள்ளது.

உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற கழகத்தின் கூட்டத்துக்கு திரு. பி. எஸ் குமாரசாமி தலைமை வகித்தார். அக்கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது

இவ்வலய பாடசாலைகளிடையேயான விளையாட்டுப் போட்டியொன்றினை நடத்துவதென்றும்-

பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் இலவச கல்வி போதனைகளை நடாத்துவது என்றும்-

இக் கல்வி வளர்ச்சிச்சபை தீர்மானித்துள்ளது (உ-90)

## பகவத்கீதை விரிவுரைகள்

யாழ்ப்பாணம் ஜூன் 11

திருநெல்வேலி ராமகிருஷ்ணாலயத்தில் எதிர் வரும் 15 ஆம் திகதி ஞாயிறுமாலை 4 00 மணியளவில் பகவத்கீதை விரிவுரைகள் சுவாமி சித்ரூபானந்தாவினால் நடத்தப் பெறும் என ராமகிருஷ்ணாலய அமைப்பாளர் இரா. மகேந்திரசிங்கம் தெரிவித்தார்.

இவ்விரிவுரைகளில் கலந்து கொள்ள விரும்புவர்கள் ராமகிருஷ்ணாலயத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (உ—ஒ)

## நினைவாஞ்சலி கூட்டம்

சாவகச்சேரி, ஜூன் 11

தமிழ் மூதறிஞர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் மட்டுவில் மகாமுத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் நடைபெற்றது.

சிவஸ்ரீ அ சிவசாமிக் குருக்கள் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் இளைப்பாறிய அதிபர் திரு. ஏ. சிவஞானம், சந்திரமௌலீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. சி. இராசசேகரம், பண்டிதர் சிவகுருநாதன், அதிபர் திரு. க. வயிரவப்பிள்ளை முதலான பலர் உரையாற்றினர். (உ-31)

## மக்கள் முகம்

### பாடசாலை அபிவிருத்திச் சங்க உத்தியோகத்தர்

மானிப்பாய், ஜூன் 11

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை பாடசாலை அபிவிருத்திச் சங்க உத்தியோகத்தர்கள் விவரம் வருமாறு:

தலைவர் திரு இ. வல்லிபுரம் (அதிபர்) செயலாளர் திரு. என். பரமகுரு. பொருளாளர் திருமதி. ரி. அரியம்.

ஆட்சிக்குழு உறுப்பினர்கள் திருமதி எம். குருசுமுத்து. திருமதி எஸ். ஐயாத்துரை, திரு. எம். மாணிக்கம், திருமதி. ரி. யோசேப்பு, திரு. ஆர் செல்வநாயகம், திரு. கே மகாலிங்கம், திரு. கே. பரமசிவம், திருமதி கே. முத்துத்தம்பி (இ - 90)

## இணக்க சபை

சண்டுக்குளி ஜூன் 11

கொழும்புத்துறை கிராமத்தில் இணக்க சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி தனது சேவையை ஆரம்பித்த இந்த இணக்கசபையின் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சமாதான நீதவான் திரு. இரா.செல்வராசா, உப தலைவர்; திரு. கே இராசையா, செயலாளர்; திரு. செ. நரேந்திரன், உபசெயலாளர்: திரு. சி. மகேசன் தனாதிகாரி: திரு க நடராசா, உபதனாதிகாரி: திரு. ஐ. பேரானந்தம் 19பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (இ-ஒ)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## மூன்று மாதங்களுக்குரிய உணவுக் கையிருப்பு நெடுந்தீவு கூட்டுறவுச் சங்கத்துக்கு இல்லாதது ஏன்?

### தலைவர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

மூன்று மாதங்களுக்கு உரிய உணவுப் பொருள்களை கையிருப்பில் வைத்திருக்கக் கூடியதாக நிதி உதவி செய்து தரும்படி யாழ் அரசாங்க அதிபரிடம் விடுத்த கோரிக்கை இன்னும் கவனிக்கப்படவில்லை. இது விடயமாக கூட்டுறவுத்துறை அமைச்சருடன் தொடர்பு கொண்டுள்ளேன்.

நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு நா. இராமச்சந்திரன் இவ்வாறு அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

"மூன்று மாதங்களுக்குரிய உணவுப் பொருள்கள் எந்த நேரமும் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் கையிருப்பில் இருக்க வேண்டும்'' — என்ற விவகாரம் குறித்து விடுத்த அறிக்கையிலேயே திரு. இராமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

2-6-1986ஆம் திகதி உதயனில் குறிகாட்டுவான்- நெடுந்தீவுப் படகுச் சேவை வாரம் மூன்று நாள் என்ற தலைப்புடன் வெளியான செய்தியில் மூன்று மாதங்களுக்கு உரிய உணவுப் பொருள்களை கூட்டுறவுச் சங்கங்கள் வைத்திருக்க வேண்டும் என்ற விடயமும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அதுகுறித்து விளக்கும் வகையிலேயே திரு. இராமச்சந்திரன் இந்த அறிக்கையை விடுத்தார். பிரஸ்தாப அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாட்டில் தற்போது நிலவும் கலவரநிலை, நெடுந்தீவிற்கான பயணக் கஷ்டநிலை ஆகியவற்றின் மத்தியில் அரிசி, மா, சீனி, டீஸல் ஆகிய பொருள்களைக் கொள்வனவு செய்து கொண்டு செல்வதில் உள்ள கஷ்டங்களை அரசாங்க அதிபர், உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி ஆகியோருக்குச் சுட்டிக் காட்டினோம்.

மூன்று மாதங்களுக்கு உரிய உணவுப் பொருள்களைக் கையிருப்பில் வைக்கக் கூடியதாக நிதி வசதி செய்து தரும்படி அவர்களைக் கேட்டுக் கொண்டோம்.

யாழ் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். வேலாயுதபிள்ளையும் நானும் இது பற்றி பல தடவை நினைவூட்டினோம். இன்று வரை எமக்கு நிதிவசதி செய்து தரப்படவில்லை.

இது விடயமாக நான் கூட்டுறவு அமைச்சருடன் தொடர்பு கொண்டிருக்கின்றேன்.

கடந்த காலங்களில் நெடுந்தீவில் உணவுத் திணைக்களத்தின் பண்டசாலை இயங்கியது. எனினும் பல்வேறு காரணங்களினால் பண்டசாலை மூடப்பட்டு உணவுப் பொருள்களின் ஏற்றுமதி வேலைகள் எமது சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

இதைச் சுட்டிக்காட்டி போதிய கையிருப்பில் வைப்பதற்குரிய பொருள்கள் எமக்குத் தரப்பட வேண்டும் என்று கேட்டோம்.

அப்படித் தராத பட்சத்தில் ஏற்றுமதி வேலைகளை மீண்டும் உணவுத் திணைக்களம் கையேற்க வேண்டும் என்றும் விநியோகத்திற்காக பொருள்களை நெடுந்தீவில் வைத்து எமது சங்கத்துக்கு [illegible] மாறும் கேட்டிருந்தோம்.

நானும் உதவி ஆணையாளரும் விடுத்த இக் கோரிக்கைகள் இன்று வரை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அத்துடன் நாம் கேட்டிருந்தபடி கடன்வசதியை யாழ் அரச அதிபர் இன்று வரை செய்து தரவில்லை.

இப்படி நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. இராமச்சந்திரன் அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-எ)

## ஆயுள்வேத மூலிகை நியாய விலையில் கிடைக்க வேண்டும்

உடுவில், ஜூன்.11

இலங்கையில் ஆயுள்வேத மருத்துவத்துறை வளர்ச்சியடைய விரும்பினால் மருந்துக்கான மூலிகைகளையும் ஏனையவற்றையும் வைத்தியர்களுக்கு நியாய விலையில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மருந்து தயாரிப்பதில் ஏற்படும் செலவுகளைக் குறைப்பதன் மூலமே குறைந்தவிலைக்கு வைத்தியர்கள் நோயாளருக்கு சிறந்த மருந்து வகைகளை வழங்க முடியும்.

யாழ். அரசினர் ஆயுள்வேதக் கல்லூரி விரிவுரையாளரும்—செஞ்சிலுவைச் சங்க வட பிரதேச ஆணையாளருமான வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி இவ்வாறு குறிப்பிட்டார்.

கந்தரோடை மக்களின் வைத்தியசாலை இல்லாக்குறையை தீர்த்துவைக்க 'துர்க்கா-மெடிக்கல் கிளினிக்' ஆரோக்கிய சாலையை திறந்து வைத்து அவர் பேசினார்.

அவர் மேலும் பேசுகையில் ஆயுள்வேத மருந்துகள் எமது மக்களை பன்னெடுங்காலமாக பிணிகளிலிருந்து காப்பாற்றி வந்துள்ளன.

நல்லாரோக்கியமான சமுதாயத்தை கட்டி வளர்க்கவும் உறுதுணையாக நின்றுள்ளன என்றார்.

சுன்னாகம் முன்னாள் பட்டணசபை உறுப்பினர் திரு. எம். நடராசா தலைமையில் நிகழ்ந்த திறப்பு விழா வைபவத்தில் பலர் கலந்து கொண்டனர்.

முன்னாள் கல்விப் பணிப்பாளர் திரு. தி மாணிக்கவாசகர் கந்தரோடை தபால் கந்தோர் அதிபர் திரு கணேசவேல், ஆசிரியர்கள் திரு. கே. புவனேந்திரன், திரு. கந்தையா, அதிபர் திரு. திருநாவுக்கரசு ஆகியோரும் பேசினர். (இ-ஒ)

## செய்முறை பயிற்சி வகுப்பு

சாவகச்சேரி, ஜூன் 11

அறவழிப் போராட்டக் குழுவினரால் நடத்தப்படும் பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான ஆக்க முயற்சிப் பாடநெறிக்கான செய்முறைப் பயிற்சி வகுப்புகள் அண்மையில் நடத்தப்பட்டன. இவ் வகுப்புக்களை சரஸ்வதி வித்தியாலய உதவிஅதிபரும் ஆசிரியர் ஆலோசகருமான திரு. நாகராசா நடத்தினார்.

காலைமுதல் மாலைவரை இடம்பெற்ற இப்பயிற்சியில் 25 ஆசிரியைகள் கலந்து கொண்டனர். (இ—31)

## அராலி பிரசைகள் குழு

வட்டுக்கோட்டை ஜூன் 11

அராலி கிழக்கு, வாலை அம்மன் கோவிலடி பிரசைகள் குழுவின் புது வருட நிர்வாகிகள்தெரிவு அண்மையில் நடைபெற்றது.

பின்வருவோர் புது வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. மா. மாரிமுத்து உபதலைவர்: திரு. சி. நடராஜா, செயலாளர்; திரு. க. சி. பரமானந்தராசா, உபசெயலாளர்; திரு. பொ. சற்குணராசா, பொருளாளர்: திரு. ந நாகரத்தினம், கணக்குப் பரிசோதகர்கள்: திரு. க. தெய்வேந்திரம், திரு. க. ஜெகநாதன்.

9பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (இ-16)

## நூலகம் செயல்பட தொடங்கியது

யாழ்ப்பாணம் ஜூன் 11

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட இந்து கலாச்சார நூலகம் திங்கள் முதல் செயல்பட ஆரம்பித்துள்ளது.

இந்த நூலகம் நாவலர் வீதியில் அமைந்துள்ளது. (உ - 10)


## உதயன் - சஞ்சீவி

### சந்தா விபரம்

உள்நாடு

| காலம் | உதயன் | சஞ்சீவி | உதயனும் சஞ்சீவியும் |
|---|---|---|---|
| | ரூ ச | ரூ ச | ரூ ச |
| ஒரு வருடம் | 313-00 | 104 00 | 417 00 |
| 06 மாதம் | 156-50 | 52-00 | 208 50 |
| 03 மாதம் | 78 50 | 26 00 | 104 50 |

அஞ்சல் செலவு உட்பட

| காலம் | ரூ ச | ரூ ச | ரூ ச |
|---|---|---|---|
| ஒரு வருடம் | 469 50 | 156-00 | 625-50 |
| 06 மாதம் | 234-75 | 78 00 | 312 75 |
| 03 மாதம் | 117-50 | 39-00 | 156-50 |

சந்தா விபரங்கள் மாற்றத்துக்குரியன.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

மௌனத்தைப் போன்ற நண்பன் உலகில் இல்லை.

—தர்மசக்கரம்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல. 18 [illegible] ஒழுங்கை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 11-06-86
தொலைபேசி 24805, 22078 த. பெ. 28

# அரசின் புதிய முயற்சி பெரும் தப்புக்கணக்கு?

இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு புதிய முயற்சி ஒன்றில் இறங்கப் போவதாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அறிவித்திருக்கிறார்.

இம்முறை அவர் தென்னிலங்கை இடதுசாரிகளின் உதவியை நாடி உள்ளார். தமிழ்ப் போராளிகள் அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இடதுசாரிகளை தரகர் வேலைக்கு அமர்த்துவதே அவரது புதிய முயற்சி.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியாவின் உதவியையும், நல்லெண்ணத்தையும் நாடுவதாகக் கடந்த சுமார் மூன்று வருடங்களாக ஜனாதிபதி கூறி வந்தார். காலத்தைக் கடத்தி வந்தார்.

கிடைத்த பலன் எதுவுமில்லை. அரசியல் தீர்வு என்று கூறிக் கூறி. இராணுவ அத்துமீறல்கள், அக்கிரமங்கள் மூலம் தமிழ் மக்களைக் கொன்று குவிக்கும் திட்டம் மட்டுமே சரிவர நிறைவேற்றப்பட்டது. கண்டது வேறு எதுவுமில்லை.

தாம் நினைத்த தீர்வைத் தமிழ் மக்கள் மீது திணிப்பதற்கு இந்தியா ஒரு போதும் உடந்தையாக இருக்கமாட்டாது என்பது இப்போது ஜே. ஆருக்குப் புரிந்துவிட்டது.

தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கும் விதத்தில் அமைந்த நியாயமான தீர்வு அல்லாத எதையும் அவர்கள் மீது திணிப்பதற்கு இந்தியா உடந்தையாக இருக்கமாட்டாது. தமிழ் மக்களை தொடர்ந்தும் அடிமைகளாக வைத்திருக்கவோ, ஆட்சிப் பரவலில் அல்லது அதிகாரப் பரவலில் நாணயக் கயிற்றைத் தென்னிலங்கையர் வைத்திருக்கவோ வகை செய்யும் திட்டம் எதையும் ஏற்குமாறு இந்தியா தமிழர் அமைப்புகளை நிர்ப்பந்திக்காது என்பதையும் இலங்கை ஜனாதிபதி புரிந்துவிட்டார்.

அதனால் இனப்பிரச்சினை விவகாரத்தில் மெதுவாக — நைஸாக — சாமர்த்தியமாக இந்தியாவை ஒதுக்கி விட வேண்டும் என்று ஜனாதிபதி நினைத்துவிட்டார் போலத் தெரிகிறது. அதனால் தான் இவ்விஷயத்தை காமன்வெல்த்துக்குக் கொண்டுபோவது குறித்தும் ஐ. நா. வுக்குக் கொண்டுபோவது குறித்தும் தமது சிஷ்யப் பிள்ளைகள் மூலம் கதை விட்டுப் பார்க்கிறார். அது குறித்து வெளி அபிப்பிராயம் எப்படி இருக்கிறது என்பதனை அறிவதற்கான ஒரு நாடி பிடித்துப் பார்க்கும் (பீலர்) முயற்சியே அது.

அந்த வகையில் மூன்றாவது படி தான் தென்னிலங்கை இடதுசாரிகளைத் தமக்கு தரகர்களாக்கும் முயற்சி.

முன்னர் ஒரு தடவை (1985 இல்) மூன்று மாத யுத்த நிறுத்தம் செய்து அந்தக் கால எல்லைக்குள் தீர்வு எதையும் காணத் தவறியது இலங்கை அரசு.

இப்போது இடதுசாரிகள் மூலம் மீண்டும் ஒரு யுத்த நிறுத்தத்தை உருவாக்க முயற்சிக்கிறார் ஜனாதிபதி.

தென்னிலங்கை இடதுசாரிகள் அரசுக்கு உதவி செய்ய முன்வருவார்களோ இல்லையோ என்பது வேறு விடயம்.

உருப்படியான ஒரு தீர்வுத்திட்டம் இல்லாமல் யுத்த நிறுத்தத்தை ஒரு முன் நிபந்தனையாக தமிழர் அமைப்புகள் ஏற்றுக்கொள்ளுமா என்பதே கேள்வி. சென்ற தடவை ஒரு பாடம் படித்த பின்னரும் அவை அதற்கு இணங்க மாட்டா. இணங்கவும் கூடாது.

தென்னிலங்கயில் நடக்கும் சம்பவங்களைத் தவிர்த்தாக வேண்டும் என்ற அவசரமும் அவசியமும் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுவிட்டது. அதனால் யுத்த நிறுத்தம் ஒன்றும் அரசுக்கு அவசியமாகிவிட்டது.

புதிய முயற்சியின் முக்கிய நோக்கங்களில் அதுவும் ஒன்று.

அடுத்தது —

தமிழ்ப் போராளிகளை மார்க்ஸியப் பயங்கரவாதிகள் என்றே இப்போது அரசாங்கம் வர்ணித்து வருகிறது. வெளிநாடுகளுக்கு அப்படியே பிரசாரமும் செய்கிறது. இனப் பிரச்சினை என்று ஒன்று இலங்கையில் இல்லை, அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நோக்குடன் மார்க்ஸியவாதிகள் நடத்தும் ஆயுதப்போராட்டம் தான் இங்கு நடக்கிறது. இவ்வாறு வெளிநாடுகளுக்குத் துணிந்து கூறி வருகிறது.

தென்னிலங்கை மார்க்ஸிய வாதிகளை (இடதுசாரிகளை) தரகர்களாக்கி யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்திவிட்டால் மார்க்ஸியவாதிகளுக்கு உள்ள கூட்டுறவைப் பார்த்தீர்களா? நான் கூறியதில் என்ன பொய்? என்று கேட்கலாம் என ஜனாதிபதி திட்டமிடுகிறார்.

இன்னொன்று—

இந்த மாதத்தில் இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடக்கிறது. உதவியை அதிகரிப்பதா அல்லது குறைப்பதா என்பது அந்தக் கூட்டத்தில் தான் முடிவு செய்யப்படும்.

அந்த மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் சமாதான முயற்சிகள் நடப்பதாகக் காட்டிக் கொள்ளவேண்டும். அதன் மூலம் உதவி வழங்கும் நாடுகளை ஒருமாதிரித் 'தாஜா' செய்ய வேண்டும்.

அதற்காகத் தான் இந்தப் புதிய முயற்சியும், சர்வகட்சி மாநாடு என்ற பம்மாத்தும்.

1989 ஆம் ஆண்டு வரை எப்படியாவது இனப்பிரச்சினையை இழுத்தடித்து பதவியில் ஒட்டிக்கொள்ள வேண்டுமே!

அதற்குத்தான் அரசின் இந்த "அக்கறைகள்" எல்லாம்! தமிழ்போராளிகளுக்கு இவை எல்லாம் தெரியாமல் — புரியாமல் இருக்கும் அரசு தப்புக்கணக்குப் போடுகிறதா?

# வெள்ளம் 45 பேர் பலி

## ஜமேக்காவில் பயங்கரம்

கிங்ஸ்டன், ஜூன் 11

ஜமேக்கா நாட்டில் பெய்த கடும்மழை காரணமாக பலர் மாண்டனர். இதுவரையில் 45 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் வெள்ளத்தினால் பல சடலங்கள் அள்ளப்பட்டுச் சென்றிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

பல்லாயிரக் கணக்கான விவசாய நிலங்கள் வெள்ளத்தினால் சேதமாக்கப்பட்டுள்ளன.

ஜமேக்காவின் தலைநகரான கிங்ஸ்டனிலிருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்லும் பிரதான வீதிகளும் சாலைகளும் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக ராய்டர் செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

ஜமேக்காவில் நெல் அறுவடைக்குத் தயாராக இருந்தபொழுதே இந்த விபரீதம் நிகழ்ந்துள்ளது.

உலகின் பல நாடுகளுக்கு கரும்பு ஏற்றுமதி செய்வதில் முன்னணியில் திகழ்ந்து வந்தது ஜமேக்கா.

பல ஏக்கர் கரும்புத் தோட்டங்கள் வெள்ளத்தால் நாசமாகியுள்ளன. (இ-ஒ)

## மூன்று சீக்கியரை தேடி வேட்டை

புதுடில்லி, ஜூன் 10

நியூயோர்க்கிலிருந்து இந்தியா நோக்கிப் புறப்பட்ட ஜம்போ ஜெட் விமானமொன்றில் வெடிகுண்டுவைக்க எத்தனித்த மூன்று சீக்கியர்களை தேடிப்பிடிப்பதில் பொலீஸார் தீவிர முயற்சி எடுத்து வருகின்றனர்.

இச்சம்பவத்தில் நேரடித் தொடர்பு உடையவர்கள் என்ற சந்தேகத்தில் ஐவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜூன் முதலாம் திகதி இச்சம்பவம் நியூயோர்க்கில் நடைபெற்றது.

கைதானவர்கள் கொடுத்த தகவல்களின் படி 1985 ஆம் ஆண்டு அயர்லாந்துக்கருகே ஆகாயத்தில் வெடித்துச் சிதறி 329 பேரைப் பலிகொண்ட விமானத்தகர்ப்புக்கும் இவர்களே சூத்திரதாரிகள் எனக்கருத முடிகின்றதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (இ-ஒ)

## நேபாள பதிய பிரதமர் இன்று தெரிவு

காட்மாண்டு, ஜூன் 11

நேபாள நாட்டின் நாடாளுமன்றம் புதிய பிரதமரைத் தெரிவுசெய்வதற்காக இன்று புதன்கிழமை கூடவிருக்கின்றது.

அன்றைய தினம் நேபாள மன்னர் வீரேந்திரா, நாடாளுமன்றத்தில் தொடக்கவுரை நிகழ்த்துவார்.

நாடாளுமன்றத்தின் 140 எம். பிக்களில் 90 சதவீதமானோர் புதுமுகங்கள் என்று அறிவிக்கப் பட்டுள்ளது (இ-எ)

## வால்ட் ஹெய்ம் தெரிவு குறித்து இஸ்ரவேல் வருத்தம், ஏமாற்றம்

### வியன்னாவிலுள்ள தூதரை திருப்பி அழைத்தது

டெல்அவிவ், ஜூன் 10

ஆஸ்திரிய ஜனாதிபதியாக ஐ. நா. முன்னாள் பொதுச் செயலாளர் குர்ட் வால்ட்ஹெய்ம் தெரிவானது குறித்து இஸ்ரவேல் வருத்தமும் ஏமாற்றமும் தெரிவித்தது.

வியன்னாவில் உள்ள தனது தூதரையும் இஸ்ரவேல் உடனடியாகத் திருப்பி அழைத்து விட்டது.

இரண்டாம் உலகமகா யுத்தத்தில் ஜெர்மன் இராணுவ அதிகாரியாக இருந்து யூதர் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட ஒருவர் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாகவே இஸ்ரவேல் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

ஆனால் ஆஸ்திரியாவுடனான ராஜரீகத் தொடர்புகளை இஸ்ரவேல் முறித்துக்கொள்ள மாட்டாது என்றே ராஜதந்திர வட்டாரங்களில் கூறப்படுவதாக பி. பி. ஸி. அறிவித்தது.

இதனிடையில் ஐ நா பொதுச் செயலாளராகப் பணியாற்றுகையில் திரு. குர்ட் வால்ட்ஹெய்ம் பெரும்சேவையாற்றினார் என்று ரஷ்யா பாராட்டி உள்ளது.

ஆஸ்திரிய ஜனாதிபதி என்ற முறையில் அமெரிக்காவுக்கு விஜயஞ்செய்வதற்கு அமெரிக்கா திரு. குர்ட் வால்ட்ஹெய்முக்கு விதிவிலக்களித்துள்ளது.

யூதர் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் அமெரிக்காவுக்குள் வருவதற்கு நீதி அமைச்சு விடுத்த தடை, திரு. வால்ட் ஹெய்ம் விஷயத்தில் அமுல் நடத்தப்படமாட்டாது.

இப்படி அமெரிக்க நீதி அமைச்சு அதிகாரி ஒருவர் அறிவித்தார். (இ-எ)

## பாகிஸ்தானில் 11 எதிர்க் கட்சிகள் இணைந்து கூட்டம்

இஸ்லாமாபாத், ஜூன் 10

பாகிஸ்தானில் உள்ள 11 எதிர்க்கட்சிகளின் கூட்டம் ஒன்று ஜூன் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது.

இரண்டு எதிர்க்கட்சிகளின் தலைவர்களான செல்வி பெனுசிர் பூட்டோவும் முன்னாள் விமானப் படைத் தளபதி அஸ்கர் கானும் முதல்தடவையாக அன்றுதான் நேருக்குநேர் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இந்த இரண்டு எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் இடையே பலத்த கருத்துவேறுபாடுகள் உள்ளன. (இ—எ)

## 'எய்ட்ஸ்' நோயின் ஆரம்பம் எங்கோ

மாஸ்கோ, ஜூன். 10

'எய்ட்ஸ்' நோய் ஆபிரிக்காவில் தான் முதலில் பரவியது என்ற அமெரிக்காவின் குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்துள்ளது.

ஆபிரிக்க நாடுகளில் 10,000 க்கு ஒருவர் தான் 'எய்ட்ஸ்' நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்.

இத்தொகையிலும் பார்க்க பதினைந்து மடங்கு அதிகமாக அமெரிக்க இராணுவப் படை வீரர்கள் மத்தியில் 'எய்ட்ஸ்' நோய் காணப்படுகின்றது. இப்படி ரஷ்ய பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (எ)

## இந்தியாவில் பிரிட்டிஷ் நிபுணர்கள்

லண்டன், ஜூன் 10

போதைவஸ்து கடத்தலை முறியடிக்கும் முயற்சிக்கு உதவியாக இரண்டு பிரிட்டிஷ் நிபுணர்கள் பாரதத்தில் பணியாற்றுவார்கள்.

இந்தத்தகவலை பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜில்றி ஹோவ் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் வெளியுறவு துணை மந்திரி ரிம் எட்காரும் பாரத தூதுவர் அலெச்ஸான்டரும் இது தொடர்பாக சந்தித்து பேசியதை அடுத்தே நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மேற்படி பிரிட்டிஷ் புலனாய்வு நிபுணர்கள் புதுடில்லி, பம்பாய் ஆகிய இடங்களில் பணி புரிவார்கள்.

இவ்வாறு ஹோவ் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## நாயன்மார்கட்டு பகுதி முழுவதும் யாழ் மாநகர சபையுடன் இணையுமா?

யாழ் மாநகர எல்லைப் பகுதியையும் கோப்பாய் கிராமசபை எல்லையையும் சேர்ந்த நாயன்மார்கட்டுப் பகுதியின் சில இடங்கள் பல வருட காலமாக மின்ஒளி இன்றிக் காணப்பட்டன.

இப்பகுதி வீதிகளும் சீரற்ற நிலையிலேயே தொடர்ந்திருந்து வருகின்றன. இப்பகுதி வீதிகளில் இரவில் மக்கள் நடமாட முடியாத நிலை இருந்தது. கவனிப்பாரற்ற பகுதியாகவே நாயன்மார்க்கட்டின் சில பகுதிகள் இருந்து வந்திருக்கின்றன.

இப்பகுதி மக்களின் இந்த நீண்ட நாட்குறையை உணர்ந்த யாழ் மாநகர ஆணையாளர் எடுத்த துரித நடவடிக்கையால் இருளில் இருந்துவந்த சில பகுதிகள் இன்று மின்சார ஒளி பெற்றுள்ளன.

இதற்கு மாநகர சபை ஆணையாளருக்கும், இக்குறைகளை எடுத்தியம்பி ஆணையாளர் மூலம் மின் இணைப்பை ஏற்படுத்தியவர்களுக்கும் இப்பகுதி மக்கள் நன்றி கூறாமல் இருக்க முடியாது.

நாயன்மார்கட்டுப் பகுதியில் யாழ் மாநகர எல்லையுடன் இணைந்துள்ள கோப்பாய் கிராம சபையின் எல்லைப் பகுதி யாழ் மாநகர சபையுடன் இணைக்கப்பட்டால், நாயன்மார்கட்டுப் பகுதி முழுமையாக முன்னேற்றத்தைக் காணவும் இப்பகுதி மக்கள் தமக்குத் தேவையான மின்சார, சுகாதார, குடிநீர் வசதிகளைப் பெறவும் மிகவும் வசதியாக இருக்கும்.

எனவே நகர் விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் நாயன்மார்கட்டுப் பகுதி முழுவதையும் மாநகர சபையுடன் இணைக்க ஆணையாளர் உயர்மட்ட நடவடிக்கை எடுப்பாரா?

இ. மயில்வாகனம், செயலாளர்,
பாரதிமன்ற சனசமூக நிலையம், நாயன்மார்கட்டு.

## பைத்துல்மால் நிதிக்கு ஸகாத் பணமாக ரூ. 67,450

யாழ்ப்பாணம், ஜூன் 11

இவ்வருடம் பைத்துல்மால் நிதிக்கு இதுவரை ஸகாத் பணமாக ரூபா 67.450 ரூபா கிடைத்து உள்ளது.

யாழ்ப்பாண ஜமாஅதே இஸ்லாமி பயிற்சி மன்றம் தனது அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

'5 ஆவது வருட பைத்துல்மால் நிதி' என்ற தலைப்பில் விடுக்கப்பட்ட அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

யாழ் நகரில் எமது மன்றத்தினால் உருவாக்கப்பட்ட பைத்துல்மாலுக்கு பொதுமக்களின் ஆதரவு உண்டு யாழ்நகரில் ஒரு தலைமைத்துவத்தின் கீழ் இஸ்லாமிய சமூக அமைப்பு உருவாகவேண்டும்.

இவற்றை கடந்த 4 ஆண்டுகளைவிட இந்த ஆண்டு கிடைத்த கூடுதல் நிதியில் இருந்து உணரக்கூடியதாக உள்ளது.

எமது சமுதாயத்தில் தற்போதுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண செல்வந்தர்கள், வசதி படைத்தோர் தாராளமாக உதவ முன்வரவேண்டும்.

இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

## சரத்துக்கு அஞ்சலி கூட்டம்

உடுவில், ஜூன் 11

சரத்முத்தெட்டுவேகம சிறந்த ஒரு கம்யூனிஸ்ட் வாதி மாத்திரமன்றி ஜனநாயகவாதியுமாவார். தமிழ் மக்களே தமது தலைவிதியை நிர்ணயிக்கும் தகுதியுடையவர்கள் என்று அவர் துணிந்து நாடாளுமன்றத்துள்ளும் வெளியேயும் பேசினர். அதனால் கம்யூனிஸ்டுகள் இனப்பிரச்சினையில் எந்த நிலைப்பாடுடன் உள்ளனர் என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி பூதப்பிள்ளை சதாசிவரத்தினம் சுன்னாகம் ஸ்ரீ மன் கத்தோலிக்க பாடசாலையில் நடந்த சரத் அஞ்சலிக் கூட்டத்தில் இவ்வாறு குறிப்பிட்டார்.

சுன்னாகம் இந்து இளைஞர்மன்றமும், அம்பேத்கார் சனசமூக நிலையமும் இணைந்து இந்தக்கூட்டத்தை நடத்தின.

திரு செ தேவலோகேஸ்வரன் தலைமை உரை வழங்கினார்.

திரு. கே. மார்க்கண்டன், திரு. எஸ். அருச்சுணன், திரு ஜோதிபால உட்பட பலர் அஞ்சலியுரை நிகழ்த்தினர். (-இ-ஒ)

## வருடாந்த மகோற்சவ திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 11

வட்டுக்கோட்டை சங்கரத்தை முருக மூர்த்தி கோயில் வருடாந்த மகோற்சவத் திருவிழா இன்று புதன்கிழமை ஆரம்பமாகி பத்துத் தினங்கள் தொடர்ந்து நடைபெறும்.

18 ஆம் திகதி நடைபெறும் எட்டாம் திருவிழாவில் இளஞ்சைவப் புலவர் திரு. ஆர். சிறீதரனின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி உட்பட இசை நிகழச்சிகள் இடம்பெறவுள்ளன.

விசேட சாத்துப்படியும் உண்டு 11 ஆம் திகதி திருவிழா வைபவத்தில் சங்காபிஷேகம் நடைபெறும். (இ-9)

## ஸ்ரீவிசுவேச விநாயகர் கொடியேற்றம்

யாழ்ப்பாணம் ஜூ 11

வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடி ஸ்ரீவிசுவேச விநாயகர் ஆலய வருடாந்த உற்சவங்கள் நாளை 12 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றன.

20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும், 21 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

## சேக்கிழார் திருவுருவம் பிரதிட்டை

யாழ்ப்பாணம், ஜூன் 11

கீரிமலை சிவன்கோவிலில் இன்று புதன்கிழமை காலை சேக்கிழார் சுவாமிகளின் திருவுருவச்சிலை பிரதிட்டை செய்யப்

## மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 11

மீசாலை வடக்கு தட்டான்குளம் அருள்மிகு ஸ்ரீ திருநீலகண்டப் பெருமான் ஆலயத்தில் இன்று புதன்கிழமை மஹாகும்பாபிஷேகம் நிகழும்.

ஞான சொரூபியாக விளங்கும் பெருமானை இப்புனித நாளில் வழிபட்டு நல்லருள் பெறுமாறு பிரதிஷ்டா குருமார் வேண்டுகின்றனர் (இ-ஒ)

[illegible] பூசை. சேக்கிழார் குருபூசை தினம் இன்றாகும். (இ-ஒ)

**பொய்யாமொழி**



குறள்:

அஃகி அகன்ற அறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.

பொருள்:

யாரிடத்திலும் பொருளைக் கவர விரும்பிப் பொருந்தாதவற்றைச் செய்தால், நுட்பமான தாய் விரிவுடையதாய் வளர்ந்த அறிவால் பயன் என்ன?

## பெரிய புராணம் சக்தி உள்ளது அதனால் தான் 5 ஆவது வேதமாக அது ஏற்பட்டது

### சேக்கிழார் விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூன். 11

சேக்கிழார் பெருமானை ஞானாசிரியராக உரையாசிரியராக, போதனாசிரியராக, நூலாசிரியராக பல்வேறு வடிவங்களில் தரிசிக்கின்றோம். பெரியபுராணம் மிகவும் சக்திவாய்ந்தது. அதனால் அதை ஐந்தாவது வேதம் என சான்றோர் ஏற்றுள்ளனர்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடந்த சேக்கிழார் விழா முதல் நாள் நிகழ்ச்சிகளில் சொற்றமிழ்த் திலகம் செல்வி புஷ்பா செல்வநாயகம் சிறப்புரையாற்றும் பொழுது இவ்வாறு குறிப்பிட்டார்.

நல்லை ஆதீன மேலாளர் குருமகா சன்னிதானம் தவத்திரு சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் தொடர்ந்தும் அவர் உரையாற்றும்பொழுது:-

பெரிய புராணத்திற்கு தனிச்சிறப்புகள் பல உண்டு.

சரியான பாதையை மக்களுக்குக் காட்டி இறைவனைக் காண்பதற்கு ஏற்ற நல்ல வழிகாட்டியாக அது அமைகின்றது.

திருவருட் செல்லர்கள் வாழ்ந்த வாழ்வு முறையையும் அவர்களது அதீத பக்தியையும் எமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

எம்பெருமானை அடைவதற்கு பேதவித்தியாசங்கள் எதுவுமே கிடையாது என்பதை நன்கு உணர்த்துகின்றது.

அனேக புராணங்கள் வடமொழியையே மூலமாகக் கொண்டவை.

ஆனால் தமிழில் இயற்றப்பட்டு பின்னர் வடமொழிக்குச் சென்ற [illegible] துக்கு மட்டுந்தான் [illegible] ரஷ்ய மொழியில் கூட மொழி பெயர்க்கப் பட்டு பாராட்டப்பட்டு விதந்து கூறப்படுவது பெரியபுராணமாகும்.

திருத்தொண்டர் பெருமை சொல்வது தான் பெரியது எனவே சேக்கிழார் சுவாமிகள் பெரியவர் உயர்ந்தவர் சிறந்தவர் பரிபக்குவமானவர்.

இந்தப்பெருமைகளால் சேக்கிழாரது பெரியபுராணம் 5 ஆவது வேதமாகவும், 12 ஆவது புராணமாகவும் கொள்ளப்படுகின்றது.

இப்படி அவர் கூறினர். (இ-ஒ)

## சேக்கிழார் விழாவின் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 11

அகில இலங்கை சேக்கிழார் மன்ற ஆதரவோடு நடைபெறும் சேக்கிழார் விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சி இன்று (புதன்) காலையும் மாலையும் நல்லூர் ஆதீனத்தில் நடைபெறும்.

பண்டிதமணி அரங்கில் நடைபெறும் இன்றைய காலை நிகழ்ச்சிகள் சேக்கிழார் புராண படனத்துடன் ஆரம்பமாகும்.

நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஆசியுரை நிகழ்த்துவார்.

'பெரிய புராணத்தின் கதாநாயகன்' என்னும் பொருள் பற்றி வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன், சிவனடியார்கள்' என்னும் பொருள் பற்றி வித்துவான் க. பி. குலரத்தினம் ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

மதியம் அன்னதானமும் மாலையில் விசேட பூசை, சேக்கிழார்பிரான் திருவீதி உலாவும் இடம் பெறும். (எ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ரெலிபோன் ரெலெக்ஸ்**
24 மணி நேர சேவை
(எல்லா நாட்களும்)
அமைதியான, பாதுகாப்பான இடம்.
இரவில் தங்குவதற்கு அறைகள்
நியாயமான கட்டணங்கள்
Safe, Convenient Vehicle Parking
**Mack Communications & Travels**
1ம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். Tele; 24791, 24836

# உதயன்

11-06-1986 புதன்கிழமை

**வெளிநாட்டுப் பிரயாணம்**
★ துரித ஒழுங்குகள்
★ சலுகைக் கட்டண விமானச் சீட்டுகள்
★ Confirmations, Re-confirmations
★ பாஸ்போட், விசா, பொன்ட்
நம்பிக்கையைப் பெற்றவர்கள்
**Mack Communications & Travels**
1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். Tele: 24791, 24836

# ஜனாதிபதி-டிக்ஸிற்

## மீண்டும் சந்தித்துப் பேச்சு

## இலங்கையின் ஆர்வத்தை சுணக்கும் முயற்சி இது

கொழும்பு, ஜூன் 11
சிதம்பரம் குழு மூலம் அனுப்பப்பட்ட யோசனைகளில் காணப்படும் இடைவெளிகளை நிரப்புவதில் இலங்கை அரசுக்கு உண்மையான ஆர்வம் இருக்கிறதா? இதைக் கண்டறிவதில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் தற்சமயம் ஈடுபட்டிருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ராஜீவ் காந்தியின் பதில் கடிதத்தை திரு ஜெயவர்த்தனவிடம் கையளித்த பின்னர் இது சம்பந்தமான நடவடிக்கையில் இந்தியத் தூதர் உடனடியாக இறங்கினர்.

தனது யோசனைகளுக்கு புதிய வியாக்கியானங்களும் விளக்கங்களும் அளிக்க இலங்கை அரசு தயாராக உள்ளது என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன திரு. டிக்ஸிற் மூலம் இந்தியப் பிரதமருக்கு செய்தி அனுப்பியிருந்தார்.

அதற்கான இந்தியப் பிரதமரின் பதிலைத்தான் திரு. டிக்ஸிற் சடந்த திங்கள் ஜனாதிபதியிடம் கையளித்தார்.

### இரண்டாவது சந்திப்பு

முதற் சந்திப்பு இடம்பெற்ற 24 மணித்தியாலங்களுக்குள் திரு. டிக்ஸிற் இரண்டாவது தடவையாக ஜனாதிபதி ஜெயவர்த்தனவைச் சந்தித்தார்.

பிரதமர் காந்தி அனுப்பிய பதிலை வாசித்த பின்னர் தான் திரு. டிக்ஸிற்றுடனை இரண்டாவது சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது.

அதன் பின்னர் திரு. டிக்ஸிற், தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி, காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா ஆகியோரை தனித் தனியாகச் சந்தித்துப் பேசினார்.

சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு விடயங்கள் சம்பந்தமான யோசனையில் காணப்படும் இடைவெளிகளை நிரப்புவது சம்பந்தமாக அமைச்சர் லலித் அத்துலத் முதலியுடனும்—

காணி விஷயம் சம்பந்தமாகக் காணப்படும் இடைவெளிகளை நிரப்புவது பற்றி அமைச்சர் காமினி திஸநாயக்காவுடனும் திரு. டிக்ஸிற் பேச்சுக்களை நடத்தினர் என்று தெரியவருகிறது (உ—எ(

## இலங்கை நிலை இவ்வாரம் தெரியும்?

கொழும்பு ஜூன் 11
இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் விஷயத்தில் இலங்கை அரசு எடுத்துள்ள பிந்திய நிலைப்பாடு இந்திய அரசுக்கு, இவ்வாரத்தில் தெரியப்படுத்தப்படலாம் என்று தெரியவருகிறது.

கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள இலங்கைத் தூதர் பேர்னட் திலகரத்தின மூலம் இலங்கை அரசின் நிலை, இந்தியாவுக்கு தெரிவிக்கப்படும் என்று தெரிகிறது.

## காரைநகர்

### கடற்படை முகாமில் 3 வெளிநாட்டுக் கப்பல்கள்!

யாழ்ப்பாணம், ஜூன் 11
காரைநகர் கடற்படை முகாமுக்கு நேற்று அதிகாலை மூன்று பெரிய வெளிநாட்டுக் கப்பல்கள் வந்து சேர்ந்தன என்று கூறப்படுகின்றது.

300க்கு அதிகமான படையினர், ஆயுதங்கள், இரண்டு நவீன வாகனங்கள், உணவுப் பொருள்கள் இக்கப்பல்களில் வந்து சேர்ந்தன என்று சொல்லப்படுகிறது.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;

இம் மூன்று கப்பல்களும் அதிகாலை 4 மணியளவில் காரைநகர் முகாம் கடலை நெருங்கியதும், கடற்படை முகாமில் இருந்து பாதுகாப்பு வழங்க பல பீரங்கிப் படகுகள் சென்றனவாம்.

அச்சமயம் நடுக்கடலில் குண்டு ஒன்று பெரிய சத்தத்துடன் வெடித்தது.

இதைத் தொடர்ந்து பெரிய கப்பல்களைச் சுற்றி வளைத்து பாதுகாப்பு வழங்கிய பீரங்கிப் படகுகள் வேட்டுக்களைத் தீர்க்கத் தொடங்கின.

இப்படி சுமார் 45 நிமிடங்கள் வரையில் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

மூன்று கப்பல்களில் இருந்த ஆயுதப்படையினர், கொண்டு வந்த பொருள்களுடன் ஒரு பக்கமாகவும் குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டவர்கள் மறுபுறமாகவும் படகுகளில் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர் 2 ஹெலிக்கொப்டர்கள் அச்சமயம் பாதுகாப்பு வழங்கின.

பின்னர் ஆயுதப்படையினர் ஹெலிக்கொப்டர்கள், விமானங்கள் மூலம் பலாலி, யாழ்ப்பாணம், தொண்டமனாறு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனா. (இ-எ-6(

## மண்டைதீவில்

### கடற்படை மீது தாக்குதல்

### ஈ. பி. ஆர். எல். எப். அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 11
மண்டைதீவில் கடற்படை மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எப். நேற்று விடுத்த அறிக்கை வருமாறு:—

மண்டைதீவு கடற்கரையோரத்தில் கடற்தொழிலாளர்கள் முப்பற்கு மேற்பட்டோரை கோரக்கொலை புரிந்து விட்டு மண்டைதீவில் தமது மனித வேட்டையை தொடர்வதற்காக வ(ந்த) சிறிலங்கா கடற்படையினரை ஈழ மக்கள்புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப் படையினர் எதிர்கொண்டு கடுமையாகத் தாக்கினர்கள்.

மக்கள் விடுதலைப்படையின் மோட்டார் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் சிறிலங்கா கொலைகாரப் படைகள் பின்வாங்கின.

சிறிலங்கா படைகளுக்கு உதவிக்கு வந்த ஹெலிக்கொப்டர் ஒன்று எமதுபடையின் தாக்குதலில் சேதமடைந்தது.

மக்கள் விடுதலைப் படையின் மோட்டார் தாக்குதலில் பல கடற்படையினர் கொல்லப்பட்டும், காயமடைந்த நிலையிலும் கடற்படையினரால் தூக்கிச் செல்லப்பட்டனர்.

எமது தரப்பில் எவ்வித இழப்புமில்லை. இதையடுத்து மண்டைதீவுக் கடற்கரையில் கடற்படையால் படுகொலை செய்யப்பட்ட மக்களின் உடல்கள் மக்கள் விடுதலைப் படையால் மீட்கப்பட்டு குருநகர் கொண்டு வரப்பட்டன.

எமது மக்களை தமது இரத்தவெறிக்கு இலியாக்கும் எதிரிப் படைகளை எதிர்த்து உறுதி குலையாமல் நாம் தொடர்ந்து போரிடுவோம்.

எமது தாக்குதலின் போது எம்மோடு ஒன்றுபட்டு நின்ற மக்கள் தொடர்ந்தும் தமது பங்கைசெய்வதன்மூலமே நாமும் எமது கடமையை செய்ய உந்துதல் ஏற்படும் என தெரிவித்துக் கொள்கின்றோம்

மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட குருநகர் கடற் தொழிலாளர்களுக்கு எமது இதய அஞ்சலியையும் இப் படுகொலையில் துயருற்றுள்ள குருநகர் மக்களின் துயரத்திலும் நாமும் பங்கு கொள்கிறோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குடிமனை

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ஒன்று அப்பகுதியில் சுட்டுக்கொண்டிருந்தது.

மேலும் அக்கிராமத்தைச் சுற்றி சீ பிளேன்களும் பொம்மர் விமானங்களும் பறந்துகொண்டிருந்தன.

ஆகாயத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஹெலிக்கொப்டர் சூட்டினால் பல கட்டிடங்களும் வீடுகளும் சேதமடைந்தன. படையினரால் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். சிலர் நீந்திக் குருநகர் வந்தடைந்தனர்.

மண்டைதீவு தெற்குப் பக்கக் கடலில் பீரங்கிப் படகு ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. அதில் இருந்தும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

படையினரின் வருகையைத் தொடர்ந்த மண்டைதீவு மக்கள் குழந்தை குட்டிகளுடன் மண்டைதீவு - அல்லைப்பிட்டி தரவைக் கடல் மார்க்கமாக அல்லைப்பிட்டி - மண்கும்பான் பகுதிகளுக்குச் சென்றனர்

மண்டைதீவுக் கிராமத்தில் இருந்து பாதுகாப்புப்படையினரை வெளியேற்றும் முயற்சிகளில் விடுதலைப் போராளிகள் நேற்று ஈடுபட்டிருந்தனர். (இ-)

## இலங்கை

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
(புதன்) நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட விருப்பதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன

பிரதமர் காந்தியின் பதில் தற்சமயம் கொழும்பு வெளியுறவு அமைச்சு அதிகாரிகளினால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. (இ-எ)

## பூசவுல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
அளவில் யாழ் ஆயர் அதிவண. தியோகுப்பிள்ளை தலைமையில் கூட்டுத் திருப்பலி இக் கோவிலில் ஒப்புக் கொடுக்கப்படும்.

பிற்பகல் இரண்டுமணி அளவில் பூதவுடல்கள் அனைத்தும்யாழ்-பிரதான வீதி வழியாக எடுத்து வரப்பட்டு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இதனையடுத்து நகரில் உள்ள பாடசாலைகள், வியாபார நிலையங்கள் அனைத்தும் பூட்டப்பட்டிருக்கும். (இ - 10)

## அரச அதிபர்

1ஆம் பக்கத் தொடர்ச்சி
திரு -இராமநாதன் ஆகியோரும் வந்திருந்தனர்.

சடலங்களைப் பார்வையிட்ட இவர்கள் இப்பகுதி மக்களுக்கு ஆறுதல் கூறினர்.

அத்துடன் கத்தோலிக்க மத குருமார்களும் பொது ஸ்தாபன பிரமுகர்களும் அங்கு காணப்பட்டனர். (இ - 10)

## இன்று

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
கம் இந்த கடையடைப்பில் பங்குபற்றுமாறு சகல வர்த்தகர்களையும் அறிக்கை மூலம் கோரியுள்ளது.

அரச கூலிப்படைகளினால் அப்பாவி மீனவர்கள் மிலேச்சத்தனமான, காட்டுமிராண்டித்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்று தெரிவித்து யாழ். வர்த்தகர்கள் சங்கம் இந்தக் கடையடைப்புக்கு ஏற்பாடு செய்துள்ளது. (இ எ)

## குருநகர்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பங்குகொண்டு கண்ணீர் விட்டு அழுதார்கள்.

திருப்பி வருவேன் என்று கூறி காலையில் வள்ளத்தில் ஏறிச் சென்றவர்கள் மாலையில் பிணமாக, ஒவ்வொன்றாக இறக்கப்பட்ட காட்சியைக் கண்டு கண்கலங்காதவர்களே இல்லை.

குருநகர் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் உள்ள சனசமூக நிலையத்தில் சடலங்கள் வைக்கப்பட்டிருந்தன.

குருநகரே சோகநகரானது.

இறந்தவர்களின் விவரங்கள் நேற்றிரவு ஒலிபெருக்கிமூலம் குருநகர்ப் பகுதியில் அறிவிக்கப்பட்டது. (அ-எ-10)

## வல்வெட்டித்துறை- -

(1ம் பக்கத் தொடர்ச்சி
வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் இருந்து பீரங்கிகளும், ஷெல் குண்டுகளும் நகரப்பகுதியை நோக்கியும் குடியிருப்புக்களை நோக்கியும் மோசமாக ஏவப்பட்டன.

கடலிலிருந்து பீரங்கிகளும் தொடராக ஏவப்பட்டன.

பொம்மர் விமானத்தில் இருந்து குண்டுகள் வீசப்பட்டன.

அதிகாலையில் இருந்து வல்வெட்டித்துறை நகரத்தையும், குடியிருப்புக்களையும் நோக்கி நான்கு ஹெலிக்கொப்டர்கள் தனித்தும் - ஒருமித்தும் மூர்க்கத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டன.

காலையில் இருந்து பிற்பகல் 6 மணிவரையும் கடல், நில ஆகாய முப்பகுதித் தாக்குதலும் படுமோசமாக மேற்கொள்ளப்பட்டன.

வீடுகளின் இடிபாடுகளுக்குள் இருந்து மக்களை வெளியே எடுக்க முடியாதபடியும், காயமடைந்தவர்களை வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்ல முடியாதபடியும் தாக்குதல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன,

ஓரளவு வெளிவந்து வைத்தியசாலைகளுக்கு வந்தவர்களைத் தவிர பிற்பகல் 6 மணி வரையும் காயமடைந்தவர்களையும் இறந்தவர்களையும் அப்புறப்படுத்த முடியவில்லை

செய்தி எழுதும் வரையும் மந்திகை வைத்தியசாலையில் படுகாயமடைந்து அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

மூவர் யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர்.

ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவரது சடலமும் திருமதி. ஆறுமுகம் என்பவரின்வீட்டில் பணிப்பெண்ணாகத் தொழில் புரிந்த ஒருவரது சடலமுமே இனங் காணப்பட்டுள்ளன.

மேலும் நால்வரில் சடலங்கள் இனம் காணப்படவில்லை.

சுமார் பதினைந்து வீடுகள் படுமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

ஷெல்குண்டுகளாலும், ஹெலிக் கொப்டர் தாக்குதலாலும், 'பொம்மர்' குண்டு வீச்சாலும், பீரங்கிக் குண்டுகளாலும் பல வீடுகள் இடிந்தும் — உடைந்தும் காணப்படுகின்றன.

வல்லை வெளியிலும் உடுப்பிட்டியிலும் மண்டானிலும், வல்லையிலும் குண்டுகள் வந்து விழுந்தன.

விடுதலைப் புலிகளும் ஏனைய போராளிகளும் மக்களுக்கு உதவிக் கொண்டிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதல் தொடர்ந்து நடைபெற்றது ஹெலிக் கொப்டர்களுக்கும் விமானத்துக்கும் ரொக்கட் ஏவப்பட்டதுடன், எல். எம். ஜி. தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நேற்றைய தாக்குதலில் காயமடைந்தோர்;-

(1) துரைராஜா நவரத்தினராசா, 48 வயது, நவரத்தினராஜா நீர்விழி அம்மா 30 வயது. இவர்கள் இருவரும் கணவன் மனைவி. இவர்கள் யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தொண்டமானாற்றைச் சேர்ந்தவர்கள்.

(2) அல்பிறட் — மரிரேசா, 23வயது, வல்வெட்டித்துறையைச்சேர்ந்தவர். இவரும் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(3) தேவராசா ரமணன், 12 வயது உடுப்பிட்டி,

(4) கணேசன் கண்ணதாசன், 28 வயது, பருத்தித்துறை.

(5) கார்த்திகேசன் 15 வயது. வல்வெட்டித்துறை சிவன்கோயிலடி.

(6) எஸ். பாபு, 19 வயது பருத்தித்துறை.

(7) இராசலிங்கம் கமலநாதன், 9 வயது வல்வெட்டி.

(8) நாகலிங்கம் ரகு கருடாவில்.

(9) குணசிங்கம் ஜெயபா. 6 வயது, தொண்டமானாறு.

(10) ரி. சற்குணனந்தன், 18 வயது, ஊரிக்காடு.

(11) எஸ் தாஸ் 21 வயது, தொண்டமானாறு

(12) சிவகுமார், (17 வயது), வல்வெட்டித்துறை

(13) ரி. ராசேந்தர் (18வயது), வல்வெட்டித்துறை

(14) கே. நகுலன், (18 வயது) வல்வெட்டித்துறை

(15) குலசேகரம், (60 வயது) உடுப்பிட்டி (இ- 10 - 118 - 70 - 191)

## வெட்டாதீர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
இழுத்துக் கொண்டிருந்தோம்.

அப்பொழுது சற்றுத் தூரத்தில் பிளாஸ்டிக் படகுகளில் கறுப்புச் சட்டைக் காரர்கள் வருவது தெரிந்தது நான் பயத்தினால் சிறிது தூரம் நடந்து சென்று பற்றைக்குள் பதுங்கிக்கொண்டேன்.

பின்னர். பிளாஸ்டிக் படகுகளில் வந்தவர்கள் கரைவலை இழுத்துக் கொண்டிருந்தவர்களை தம்மிடம் வருமாறு சைகைமூலம் அழைப்பு விடுத்தனர்.

இவர்களும் அவர்களிடம் சென்றனர்.

அப்பொழுது கடல் தண்ணீருக்குள் இறங்கிய கறுப்புச்சட்டைக்காரர்கள் சிலர் இவர்களிற் சிலரது கைகளைக் கட்டிப் போட்டனர். சிலரைக் கையை உயர்த்துப் படி கூறினர்.

கை உயர்த்தப்பட்டது. கத்திகளால் வெட்டுகளும் குத்துகளும் மீனவர்கள்மீது விழுந்தன.

இவர்கள் கத்தினர்கள், கதறினர்கள். குளறினர்கள், வெட்டவேண்டாம் என்று கெஞ்சினர்கள்.

கேட்கவில்லை. கறுப்புச் சட்டைக்காரர்கள் தொடர்ந்தும் வெட்டினர். இறுதியில் இவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது.

பின்னர் எல்லோரும் கடல் தண்ணீருக்குள் விழுந்தனர்.

நான் அதிர்ச்சியினால் அப்படியே இருந்து விட்டேன். நண்பகல் 12 மணியளவில் நீந்திவந்து சிறுத்தீவு என்னும் இடத்தை அடைந்தேன்.

அங்கிருந்து வேறு வள்ளம் மூலம்இ ங்கு வந்து சேர்ந்தேன்.

இப்படி அவர் சொன்னார். (இ-10)

## மண்டைதீவுக் கடலில்....

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
னர். இவர்கள் ஆயுதபாணிகளாகவே வந்திருந்தனர்.

பிளாஸ்டிக் படகில் வந்தவர்கள் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களை சைகை மூலம் தம்மிடம் வருமாறு அழைத்தனர்.

கரையோரமாக நின்ற மீனவர்கள் தண்ணீரில் நடந்து முழங்கால் அளவு தண்ணீர் உள்ள கடலுக்குள் சென்றனர்.

பிளாஸ்டிக் படகுகள் நின்ற இடத்தை மீனவர்கள் அண்மித்தனர்.

அவர்களில் சிலரைத் தாவிப் பிடித்த கறுப்புச் சட்டைக்காரர் அவர்களின் கைகளைப்பின்பக்கமாகக் கட்டினர்

பின்னர் எல்லோரையும் கைகளை மேலே உயர்த்தும்படி கறுப்புச் சட்டைக்காரர்கள் பணித்தனர்.

கைகளை உயர்த்தியவர்கள் வெட்டியும் குத்தியும் சுட்டும் கொலை செய்யப்பட்டார்கள். இறந்தவர்களின் சடலங்களில் சூட்டுக் காயங்கள், வெட்டுக் காயங்கள் என்பன காணப்பட்டன.

சுமார் அரைமணி நேரமாக கறுப்புச் சட்டைக்காரர்கள் இவர்களை சித்திரவதை செய்ததாக அறியப்படுகிறது.

### குண்டு வீச்சு

அதன்பின்னர் கொலை செய்யப்பட்ட அனைத்து சடலங்களை நோக்கியும் கைக்குண்டுகள் வீசப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

இதனையடுத்து நான்கு சடலங்கள் சிதறிய நிலையில் கடலுக்குள் காணாமல் போய்விட்டன.

கொலையுண்டவர்களின் சடலங்களில் கண்கள் தோண்டப்பட்டும், மண்டை பிளந்தும், வயிற்றுப்பகுதிகள் கிழிக்கப்பட்டும் காணப்பட்டன.

இறந்தவர்களின் சடலங்கள் கடலில் இருந்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரால் மீட்டெடுக்கப்பட்டன.

இறந்தவர்களின் சடலங்களை போராளிகள் பிளாஸ்டிக் படகு ஒன்றில் ஏற்றியபொழுது அது நீரினுள் அமிழ்ந்து விட்டதாகச் சொல்லப்படுகிறது.

எனினும் அமிழ்ந்த படகினை தீவிர முயற்சி எடுத்து இழுத்து வந்து நேற்றுப் பிற்பகல் குருநகர் துறைமுகத்துக்குக் கொண்டு வந்து சேர்த்தனர்.

இறந்த அனைவரது சடலங்களும் குருநகர் சனசமூக நிலைய மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தன. (அ - 10)

## பிளாஸ்டிக் படகு குண்டு வைத்து தகர்ப்பு

### புளொட் உரிமை கோருகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 11
யாழ். கோட்டை இராணுவத்தினர் பாதுகாப்பில் இருந்த 25 அடி நீளமான பிளாஸ்டிக் அதிவேக ரோந்துப் படகு கடந்த திங்கள் இரவு எம்மால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

இப்படி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் விடுத்த அறிக்கை ஒன்றில் உரிமை கோரியுள்ளது.

இந்த ரோந்துப்படகு கோட்டை இராணுவ முகாமின் பின்புறமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததோடு, பாதுகாப்பு அரணில் இருந்து 30 அடி தூரத்தில் இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## கொலையுண்ட

1ஆம் பக்கத்தொடர்ச்சி
10. அழகானந்தம் பெனடிற் (50 வயது)
11. பங்கிராஸ் தாசியஸ் (30 வயது)
12. பெனடிற் பவியன் (28 வயது)
13. பெனடிற் மாசிலா (26 வயது)
14. பங்கிராஸ் யூலியஸ் (32 வயது)
15. பங்கிராஸ் தவம் (25 வயது)
16 தமியான் ஞெபின் நார்பேட் (25 வயது)
17. முடியப்பு ராசகுமார் (35 வயது)
18. யோன் ஜோர்ஜ் (56 வயது)
19 மனுவல் பயஸ்(60 வயது)
20. ஆசீர்வாதம் அந்தோனி பிள்ளை (70 வயது)
21. ஞானப்பிரகாசம் ஜெயபால் (16 வயது)
22. ஞானப்பிரகாசம் ஜெயகாந்தன் (14 வயது)
23. அருளானந்தம் டொமினிக் (65 வயது)
24 அன்ரன் ஷெல்டன் செயின் (21 வயது)
25 மனுவல் பற்றிக் (26 வயது)
26. சவிரியான் யேசுராசா நிக்ஸன் (12 வயது)
27. முத்துசாமி (65 வயது)
28. முத்தையா சாமிநாதன் (60 வயது)
29 அந்தோனிப் பிள்ளை பர்னந்து )60 வயது)
30. பெனடிற் ரமேஷ் (18 வயது)

இவர்கள் அனைவரும் குருநகரைச் சேர்ந்தவர்கள்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று, நான்கு பேரும் இறந்திருக்கிறார்கள். (அ - 10)

**ROCK** Engineers & Contractors
IN
**TUBE WELLS, PLUMBING, FITTINGS, TANKS & BUILDINGS WORKS**

**குழாய்க் கிணறுகள்**

உங்கள் பூமி மணற்கண்டமாக இருந்தாலென்ன, கழிக்கண்டமாக இருந்தாலென்ன, கற்கண்டமாக இருந்தாலென்ன சிறந்த நீர்வள ஆராய்ச்சியுடன், நவீன இயந்திரங்கள் மூலம், குழாய்க்கிணறுகள் எங்களால் அமைத்துத் தரப்படும்.

உங்கள் தேவைகள் வீட்டுத் தேவையாகவும் இருக்கலாம்.

பெரிய அளவிலான பயிர்ச் செய்கையாகவும் இருக்கலாம்.

**றெக் எஞ்ஜினியர்ஸ்**
பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை... உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ... வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 11-06-1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd ... Jaffna. Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under number Q J 60 N 8?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org